3,500 ரூபாய் செலவு செய்யலாம் என்பதை இப்போது 15,000 ரூபாய் வரை செலவு செய்யலாம் என்று மாற்றியிருக்கிறோம். அவ்வாறு செய்திருப்பதன் மூலமாக நீர்வளத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றுதான் அரசு முடிவு செய்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்தை பரிசீலிக்கிற முறையிலே திரும்பவும் அந்தக் குறிப்பிட்ட பகுதியிலே வேண்டுமானால் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது குறித்து அவர்கள் அரசுக்கு தனியாக எழுதி அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினா-விடை நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

பேச்சிப்பாறை, சிற்றாறு அணைகளில் தேங்கி நிற்கும் நீரை சாகுபடிக்குப் பயன்படுத்தப்படும் திட்டம்.

* வினா எண் 869—திரு. மி. வின்செண்ட்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, சிற்றாறு போன்ற அணைகளில் நீர்ப்பாசனத்திற்கு பாயும் மட்டத்தின் கீழே தேங்கி நிற்கும் 30 அடி தண்ணீரால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் சாகுபடி செய்ய முடியும் என அரசுக்குத் தெரியுமா?

(ஆ) பருவமழை தவறும் காலங்களில் இந்த தண்ணீரை பாசனத்திற்கு பயன்படுத்த ராட்சச இயந்திரங்களைக் கொண்ட Pumping Scheme திட்டத்தை கொண்டுவர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ): பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்தில் வாய்க்கால் மதகு மட்டத்திற்குக் கீழே 950 மி.க. அடி நீர் (Dead Storage) உள்ளது. சித்தாறு நீர்த்தேக்கத்தில், தண்ணீர் பாயும் மட்டத்திற்குக் கீழே உள்ள நீர் மிகக் குறைவானது. இந்த நீரை இயந்திரங்களைக் கொண்டு மேலேற்றுவது சாத்தியமில்லை என தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, பேச்சிப்பாறையிலே சித்தாறிலே மதகுக்கு கீழே உள்ள தண்ணீரைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1954ஆம் ஆண்டிற்கு முன்னாலே அது திருவிதாங்கூர் ராஜ்யத்தினுடைய பகுதியாக இருந்த காலத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த, அமைச்சராக இருந்த

1981 ஏப்ரல் 24]

திரு. சிதம்பரம் நாடார் காலத்திலே பேச்சிப்பாறையிலே இருக்கின்ற தண்ணீரை ராட்சச இயந்திரங்களை வைத்து எடுத்திருக்கிறார்கள். அது எந்த அளவுக்குப் பயன்பட்டது என்பது பிரச்சினை. சித்தாறு-இரண்டிலே உள்ள தண்ணீரை அதனுடைய மதகைத் திறந்துவிட்டாலே அதன் வழியாக் திற்பரப்பு அணைக்கு வந்து, அதன்மூலம் தண்ணீரை விட்டால் சிதறால் கால்வாயை வெட்டி அந்தத் தணணீரைப் பெற்றுக் கொடுக்கமுடியும். அதனால் சிதறால் பகுதி விவசாயிகள் பயனடைவர். ஆகவே சித்தாறு-இரண்டிலே உள்ள மதகுக்குக் கீழே இருக்கும் சுமார் 40 அடித் தண்ணீர் வீணாகத்தான் இருக்கிறது; அதை ஏற்கெனவே சொன்ன முறையிலே பயன்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இயந்திரங்களை வைத்து கீழ்மட்டத்திலே இருக்கின்ற தண்ணீரைப் பயன்படுத்துகின்ற முயற்சியை 1952–53-இல் மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பணம்தான் விரையமானதே தவிர எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. வாய்க்காலிலே அரை அடி தண்ணீர்கூட செல்லமுடியாத சூழ்நிலை இருந்ததாக நமக்குத் தகவல் இருக்கிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்குப் பிறகு அதை மேற்கொள்ளவேண்டுமானால் 1,000 குதிரை சக்திக்கு மேற்பட்ட சக்தியும், தனியாக 1,200 கே.வி. மின்சக்தியும் தேவைப்படுகிறது. அவ்வாறு செலவு செய்து தண்ணீரை அங்கிருந்து நிரந்தரமாகப் பெற முடியாது என்ற காரணத்தினால் அது கைவிடப்பட்டது. இரண்டாவது அந்தத் தண்ணீரை சுழற்சிமுறையில் எடுத்துப் பயன்படுத்த முடியுமா என்று கேட்டிருக்கிறோம். அதைப்பற்றி தகவல் வந்தபிறகு அரசு அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது இயந்திரங்களை எந்த எந்த வகையிலே எல்லாம் பயன்படுத்தித் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு முயற்சிகளைச் செய்துவருவதாகத் தெரிவித்ததற்காக அவர்களைப் பாராட்டி—இதற்கு முன்னாலேயே இயந்திரங்களை வைத்து அந்தத் தண்ணீரை இறைத்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள்—நானே அறிவேன், சிதம்பரநாதன் அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்திலே தண்ணீரை இறைத்து அதைப் பயன்படுத்தி தாளடி போன்ற பயிர்களை வைத்து விளைச்சலும் ஏற்பட்டிருக்கின்ற நிலைமையை நானே நேரிலே கண்டிருக்கிறேன் என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்வதன் மூலமாக மீண்டும் அதிகாரிகள் தந்தக் குறிப்பை மறுபரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, தண்ணீர் கொடுத்தது வரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தும் அதிகாரிகள் கொடுத்த கருத்தும் ஒன்றாகத் தான் இருக்கிறது. இயந்திரங்களை வைத்து தண்ணீர் இறைத்து தற்காலிகமாக ஏற்பாடு செய்தார்கள். அந்தத் தண்ணீரை வைத்து எந்த அளவுக்கு நாம் பாசனத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று நினைத்தோமோ அந்த அளவுக்கு அந்தக் கால்வாயில் தண்ணீர் போகவில்லை. கடைமடைப் பகுதி களுக்கு தண்ணீர் கொடுக்கப்பட முடியாத நிலைமை—தண்ணீர் போனது கால்வாயில்—ஆனால் ஒரு அடிக்குள்ளே தான் தண்ணீர் போயிருக்கிறது. ஆனால் அதற்காகச் செய்யப்படக்கூடிய செலவும் பணமும் பொருளாதார ரீதியும் கட்டுப்படியாகவில்லை என்று தெரிகிறது. இரண்டாவது, 1952லே தனியாக 1,200கே.வி. மின்சக்தி பயன்படுத்தக்கூடிய அளவிற்கு அன்றைக்கு பிரச்னை கள் இல்லமால் கூட இருந்திருக்கலாம். ஆனால் இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறை போன்ற சில பிரச்னைகள் இருக்கின்ற காரணத்தினாலே அதையும் கவனத்திலே கொள்ளுகின்றபொழுது தான் இவ்வளவு பெரிய இமாலய முயற்சி ஒரு சிறு பிரச்சினை காகத் தேவைதானா என்பதுதானே தவிர, விஞ்ஞான ரீதியாக சாத்தியக் கூறுகள் இருக்கின்றன, இல்லையென்று சொல்லவில்லை இப்பொழுது புதிதாக நாம் ஏற்பாடு செய்திருக்கக்கூடிய 15,000 ரூபாய் வரை ஒரு டன் உற்பத்திக்கு செலவு செய்யலாம் என்று வைத்திருக்கிறோமே இந்த அளவிற்குள் அது அடங்குமேயானால் திரும்பக்கூட பரிசீலனை செய்வதிலே நமக்கு ஆட்சேபணை யில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலப்புமணம் புரிந்து கொண்டவர்களின் பிள்ளைகளுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை வழங்கும் திட்டம்.

*வினா எண் 870—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலப்புமணம் புரிந்து கொண்டவர்களின் பிள்ளைகளுக்கு அரசுப் பணிகள் அளிப்பதில் முன் சலுகை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : கலப்பு மணம் புரிந்த வர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளை தந்தையின் சாதி மதக் கோட்பாடு அல்லது தாயின் சாதி மதக் கோட்பாடு ஆகியவற்றில் எதனைப் பின்பற்றி அக் குழந்தை வளர்க்கப்படுவதாக பெற்றோ ரால் உறுதிமொழி தரப்படுகிறதோ அதன் அடிப்படையில்